Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 10/2023**

**Deposition of PW.5 (LW.5)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சோலைராஜ் | ஜாதி | : | |
| த/பெ | : | கண்ணதாசன் | தொழில் | : | சார்பு ஆய்வாளர், மதுரை மாநகர I.S |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | 37/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.05.2026.

(எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு இம்மனு அனுமதிக்கப்படுகிறது )

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது மதுரை மாநகர் நுண்ணறிவு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 18.11.2017 ஆம் தேதி நான் சின்னாளபட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்றையதினம் 14.00 மணிக்கு எனது காவல்நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் மதுவிலக்கு மற்றும் புகையிலை பொருட்கள் விற்பனை தடுப்பு சம்மந்தமாக நானும், சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. திலிப் சிங், முதல்நிலை காவலர் 583 திரு. ராஜா ஆகியோர் ரோந்து சென்றுகொண்டிருந்தபோது, சின்னாளபட்டி மெயின்ரோடு, செக்காபட்டியில் அமைந்துள்ள எதிரி பொன்னுச்சாமி மகன் ராஜாராம் என்பவர் அவர் வீட்டிற்கு முன்பு பெட்டிக்கடையின் முன்பு நின்று இருந்த பள்ளி சிறார் மாணவர்களுக்கு புகையிலை பாக்கெட்டுகளை கொடுத்து விற்பனை செய்துகொண்டிருந்ததபோது, எங்கள் போலிஸ் பார்ட்டியை கண்டதும் பள்ளி சிறார் மாணவர்கள் தங்கள் கையில் வைத்திருந்த புகையிலை

பாக்கெட்டுகளை கடைக்கு முன்பு கீழே தரையில் போட்டுவிட்டு கடைக்கு பின்பக்கமாக உள்ள வீடுகள் இருக்கும் பகுதியில் ஓடிவிட்டார்கள். அப்போது நான் போலிஸ் பார்ட்டியுடன் சுற்றி வளைத்து பிடித்து மேற்படி நபரை விசாரிக்க மேற்படியார் தன்னிடம் இருந்த புகையிலை பாக்கெட்டுகள் (எண்ணிக்கை–34) அன்றையதினம் 14.30 மணிக்கு என்னிடம் கொடுத்து ஆஜர் செய்தார். நான் அவரை கைது செய்து அவர் கொடுத்த இவ்வழக்கின் சொத்துக்களை அப்போது என்னுடன் இருந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. திலிப் சிங் மற்றும் முதல்நிலை காவலர் 583 திரு. ராஜா ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்தேன். அந்த அத்தாட்சியில் மேற்கண்ட நபர்களிடம் கையொப்பம் வாங்கினேன். நான் தயார் செய்த அத்தாட்சி **(அ.சா.ஆ.5/PW.5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் இவ்வழக்கின் சொத்துக்களையும், எதிரி ராஜாராமையும் நிலையம் கொண்டு வந்து பாராவில் ஒப்படைத்தேன். அன்றையதினமே எதிரி ராஜாராம் மீது நிலைய குற்ற எண்.319/2017, சட்டபிரிவுகள் 6 r/w 24(1) COTPA Act மற்றும் பிரிவு 77 JJ Act ன் படி தானாக முன்வந்து நானே அன்றையதினம் 16.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **(அ.சா.ஆ.6/PW.5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அன்றையதினமே இவ்வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று 16.30 மணிக்கு சாட்சிகள் சண்முகம், மணிகண்டன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வைமகசரில் மேற்கண்ட சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். நான் தயார் செய்த பார்வைமகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே **(அ.சா.ஆ.7/PW.5 மற்றும் அ.சா.ஆ.8/PW.5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றையதினமே இவ்வழக்கின் சாட்சிகளான சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. திலிப் சிங் மற்றும் முதல்நிலை காவலர் 583 திரு. ராஜா, சண்முகம், மணிகண்டன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அன்றையதினமே இவ்வழக்கின் சொத்துக்களான 34 எண்ணிக்கையுள்ள புகையிலை பாக்கெட்டுகளுக்கு படிவம் 91 தயார் செய்தேன். அந்த படிவம் 91 **(அ.சா.ஆ.9/PW.5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றையதினமே வழக்கின் எதிரியையும், வழக்கின் சொத்துக்களையும் கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.III நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினேன். அந்த வழக்கு சொத்திற்கு RPR No.15/2018 என எண்ணிடப்பட்டு கனம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது. இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து இவ்வழக்கின் எதிரி மீது கடந்த 28.03.2018 ஆம் தேதி சட்டபிரிவுகள் 6 r/w 24(1) COTPA Act மற்றும் பிரிவு 77 JJ Act ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

பள்ளி சிறார்களுக்கு என்ன வயது இருக்கும் என்றால் 10 வயதுக்கு மேல் 18 வயதுக்குள் இருக்கும். உங்களிடம் காட்டப்படும் பார்வைமகசரில் திலகம் துவக்கப்பள்ளி என்று குறிப்பிடப்பட்டுள்ளது, அந்த பள்ளியை வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து திலகம் பள்ளி எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 100 மீட்டர் இருக்கும். திலகம் பள்ளி 5ம் வகுப்பு வரை உள்ள பள்ளி என்றால் சரிதான். பள்ளி நடந்துகொண்டிருந்த நேரம் என்றால் சரிதான்.

அத்தாட்சி நடந்ததாக சொல்லும் சம்பவ இடத்தில் தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை, அத்தாட்சி, திலிப்சிங் வாக்குமூலம் ஆகியவற்றில் உள்ள கையொப்பங்கள் உங்களுடையது தான் என்றால் சரிதான். நடந்ததாக சொல்லும் சம்பவத்தன்றே சாட்சிகளை விசாரித்துள்ளீர்கள் என்றால் சரிதான். குவிமுச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் உங்களுடையது என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையில் உள்ள கையொப்பம் உங்களுயைடது தான் என்றால் சரிதான். இறுதி அறிக்கையில் உள்ள உங்களது கையொப்பதை தவிர மற்ற ஆவணங்களில் உள்ள கையொங்கள் அனைத்தும் ஒரே நாளில் போடப்பட்டது என்றால் சரிதான்.

உங்களுடன் வந்த திலிப்சிங்கிடம் நீங்கள் தனியறிக்கை புகார் வாங்கவில்லை என்றால் சரிதான். ராஜாராம் கடை அருகே உள்ள நபர்களிடம் சாட்சியாக இருக்க சொல்லி நீங்கள் கேட்கவில்லை என்றால் நாங்கள் கேட்டோம், அவர்கள் மறுத்துவிட்டார்கள். நீங்கள் கேட்டதாகவும், அவர்கள் சாட்சியாக இருக்க மறுத்துவிட்டார்கள் என்பதையும் உங்களுடைய இறுதி அறிக்கையில் கூறியுள்ளீர்களா என்றால் இல்லை. அத்தாட்சி மற்றும் கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகளாக காவலர்கள் மட்டும் தான் உள்ளார்கள் என்றால் சரிதான்.

நீங்கள் சொல்லும் வயதில் படிக்கும் மாணவர்கள் நீங்கள் சொல்லும் பள்ளியில் படித்திருக்க வாய்ப்பில்லை என்றும், இந்த வழக்கிற்காக ஏற்கனவே உள்ள வழக்கு சொத்தை பயன்படுத்தி எதிரி மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு பின்னிட்டு காவல்நிலைத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியும் நீங்கள் தான், வழக்கு தாக்கல் செய்த நபரும் நீங்கள் தான் என்பதால் இந்த வழக்கிற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor